2005 செப்டம்பர் 23] [திரு. சி. பொன்னையன்]

44 தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு	72,00	...	...
46 போக்குவரத்துத் துறை	108,00,00	10,00,00	...
47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	1,00,00	...	...
பெருமொத்தம்	**1,374,62,33**	**307,03,12**	**235,08,35**

5. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(இ) கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006, வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2005–2006* ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவை விதி *190*–ல் உள்ளவாறு *24–9–2005* சனிக்கிழமை மாலை *3–00* மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் *26–9–2005* ஆம் நாள் திங்கட்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *12–54* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

23. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [*1992* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *40/1992*) *16* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2005 செப்டம்பர் 23

24. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

14. 2004 ஆம் ஆண்டு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாய (நீக்கரவு)ச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2004) 13-7-2005 முதல் செயலுக்கு வருவதாக அறிவித்து வணிக வரிகள் துறையின் 13–7–2005 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

15. பேரவை விதிகள் குழுவின் அறிக்கை. (2003–2006)

16. மனுக்கள் குழுவின் நூற்றுப் பத்தொன்பதாவது அறிக்கை. (2003–2006)

17. மனுக்கள் குழுவின் நூற்று இருபதாவது அறிக்கை. (2003–2006)

18. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2003–2006)

19. 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தினையொட்டிய வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

20. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

21. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

22. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

❖❖❖❖